
**அக்டோபர் – 25**

# தமிழ்நாடுச் செய்திகள்

## பாறுக் கழுகுகள் பாதுகாப்புத் திட்டம்




- ஆபத்தான நிலையில் உள்ள பாறுக் கழுகுகளைப் பாதுகாப்பதற்கான திட்டத்தினை தமிழ்நாடு அரசு சமீபத்தில் தொடங்கியுள்ளது.
- இரண்டு ஆண்டு பதவிக்காலம் கொண்ட மாநில அளவிலான ஒரு குழு, கழுகுகளின் தற்போதைய வாழிடங்களின் பாதுகாப்பு மற்றும் மீட்பு மற்றும் பாதுகாப்பான மண்டலங்களை உருவாக்குவதற்காக மாநிலம் முழுவதும் உள்ள கழுகுகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்து, நடவடிக்கை எடுக்க உள்ளது.
- கழுகுகளின் இறப்பிற்கான முக்கியக் காரணமான நச்சுத்தன்மை வாய்ந்த கால்நடை மருந்துகளின் (டைக்லோஃபெனாக்) பயன்பாட்டினை அகற்றச் செய்வதற்காக இக்குழு பணியாற்றும்.
- பாறுக் கழுகுகளின் முக்கிய உணவான மாடுகளின் சடலங்களில் நச்சுத்தன்மை உண்டாவதைத் தடுப்பதும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குழுவின் பொறுப்புகளில் ஒன்றாகும்.
- இந்தியாவில் 9 வகையான பாறுக் கழுகுகள் காணப்படுகின்றன.
- இந்த ஒன்பது இனங்களில், 4 மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள பாறுக் கழுகு இனங்களாகவும், ஒன்று ஆபத்தான நிலையில் உள்ள பாறுக் கழுகு உயிரினம் என்றும் IUCN அமைப்பின் சிவப்புநிறப் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளன.
- தமிழ் நாட்டில் நான்கு வகையான பாறுக் கழுகுகள் காணப்படுகின்றன. அவை
    - ஓரியண்டல் வெண் முதுகு கழுகு
    - நீண்ட அலகு கொண்ட கழுகு
    - செந்தலை கழுகு மற்றும்

- ○ எகிப்திய கழுகு.

- ❖ இதில் முதல் மூன்று இனங்கள் உள்நாட்டு இனங்கள் ஆகும் என்பதோடு அவற்றை நீலகிரி மற்றும் சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளில் காணலாம்.
- ❖ தர்மபுரியில் ஒரேயொரு இடத்தில் மட்டும் எகிப்தியக் கழுகுகள் இனப்பெருக்கம் செய்யப் பட்டதற்கான சான்றுகள் உள்ளன.

# தேசியச் செய்திகள்

## புதிய காங்கிரஸ் தலைவர்



- ❖ கர்நாடகாவின் மூத்தத் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே தனது போட்டியாளரான கேரளாவினைச் சேர்ந்த சசி தரூரைத் தோற்கடித்துள்ளார்.
- ❖ 24 ஆண்டுகளில் காந்தியக் குடும்பத்தைச் சாராத முதல் காங்கிரஸ் தலைவர் இவர் ஆவார்.
- ❖ கடந்த 40 ஆண்டுகளில் பழம்பெரும் இந்த அமைப்பின் முதல் பட்டியலினச் சாதியினர் பிரிவினைச் சேர்ந்த தலைவர் இவர் ஆவார்.
- ❖ இது கடந்த 22 ஆண்டுகளில் காங்கிரஸ் தலைவர் பதவிக்கான முதல் தேர்தல் மற்றும் அக்கட்சியின் 137 ஆண்டுகால வரலாற்றில் ஆறாவது பெரிய போட்டியாகும்.
- ❖ 1939 ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைவருக்கான முதல் தேர்தல் நடத்தப் பட்டது.
- ❖ அதில் மகாத்மா காந்தியின் ஆதரவு பெற்ற பட்டாபி சீதாராமையா நேதாஜி சுபாஷ் சந்திர போஸிடம் தோல்வி அடைந்தார்.
- ❖ இந்த தேர்தலில் 9,500 கட்சி பிரதிநிதிகள் வாக்களித்தனர்.
- ❖ கார்கே 7,897 வாக்குகளும், தரூர் 1,072 வாக்குகளும் பெற்றனர்.

# சர்வதேசச் செய்திகள்

## ஐக்கியப் பேரரசின் பிரதமர் ராஜினாமா

- ❖ ஐக்கியப் பேரரசின் பிரதமர் லிஸ் ட்ரஸ், வரிக் குறைப்பு நிதிநிலை அறிக்கை தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து தனது பதவியினை ராஜினாமா செய்தார்.
- ❖ ட்ரஸ் வெறும் 44 நாட்கள் மட்டுமே அப்பதவியில் இருந்த நிலையில், பிரிட்டிஷ் வரலாற்றில் மிகக் குறுகிய காலம் மட்டுமே பணியாற்றியப் பிரதம மந்திரி என்ற

பெருமையை இவர் பெற்றுள்ளார்.

- முன்னதாக, போரிஸ் ஜான்சன் ஜூலை மாதத் தொடக்கத்தில் அந்தப் பதவியினை ராஜினாமா செய்தார்.
- தற்போது நிலவி வரும் பொருளாதாரத்தின் நிச்சயமற்றத் தன்மையானது, உலகின் ஆறாவது பெரியப் பொருளாதாரத்தின் சந்தைகளை மேலும் அச்சத்தில் ஆழ்த்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.



## உலக சுகாதார உச்சி மாநாடு 2022




- உலக சுகாதார உச்சி மாநாடானது, ஒரு சர்வதேச சுகாதார மாநாடாக ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடைபெற்று வருகிறது.
- உலக சுகாதார மாநாட்டினை உலக சுகாதார நிறுவனம் இணைந்து நடத்துவது இதுவே முதல் முறையாகும்.
- இதன் தொடக்க விழாவின் முக்கியக் கருத்துருவான உலக சுகாதாரத்தினை ஒரு புதிய நிலைக்கு எடுத்துச் செல்வது என்பது அறிவியல் துறைகளுக்கும் அறிவியல், அரசியல் மற்றும் சமூகத்திற்கும் இடையே பரிமாற்றத்தின் அவசியத்தை வலியுறுத்தியது.

## ஒரு சுகாதாரக் கூட்டு செயல் திட்டம்

- நான்கு அங்க அமைப்பானது புதிய ஒரு சுகாதாரக் கூட்டு செயல் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
  - ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO)
  - ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP)
  - உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும்
  - விலங்கு ஆரோக்கியத்திற்கான உலக அமைப்பு (WOAH)
- இந்தச் செயல் திட்டமானது, ஒரு கட்டமைப்பை உருவாக்கி, சுகாதார பேரிடர்களுக்கான மேம்படுத்தப்பட்ட கூட்டுத் தடுப்பு, கணிப்பு, கண்டறிதல் மற்றும்

நடவடிக்கைகள் மேற்கொள்வது ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான அமைப்புகளையும் திறனையும் ஒருங்கிணைக்க உள்ளது.

- இது மக்கள், விலங்குகள், தாவரங்கள் மற்றும் சுற்றுச்சூழலின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு நிலையான மேம்பாட்டினையும் ஆதரிக்கும்.




## நிஹோன்சுவிற்குப் புவிசார் குறியீடு




- சென்னையில் உள்ள புவிசார் குறியீட்டுப் பதிவகத்திடம் ஜப்பானைச் சேர்ந்த ஒரு தயாரிப்பு நிறுவனம் குறியீடு கோரி விண்ணப்பிப்பது இதுவே முதல் முறையாகும்.

- நிஹோன்ஷு ஜப்பானிய சேக் என்றும் அழைக்கப்படும் ஒரு மதுபானமாகும்.
- இது நொதித்த அரிசியிலிருந்துத் தயாரிக்கப்படுகின்ற ஒரு சிறப்பு மற்றும் மதிப்பு மிக்க பானமாகக் கருதப் படுகிறது.
- மக்கள் திருவிழாக்கள், திருமணங்கள் அல்லது இறுதிச் சடங்குகள் போன்ற சிறப்பு நிகழ்வுகளில் பாரம்பரியமாக நிஹோன்ஷு பானத்தினை அருந்துவர் என்றாலும் இது தினசரி அடிப்படையிலும் உட்கொள்ளப்படுகிறது.
- எனவே, இது ஜப்பானில் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்தப் பகுதியாகும்.

## சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் தலைமை





- சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் தலைமை மற்றும் இணைத் தலைமையாக இந்தியா மற்றும் பிரான்ஸ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் தலைவராக மத்திய மின்சாரம் & புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் R.K. சிங் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இணைத் தலைவராக பிரான்ஸ் அரசின் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சரான கிறிசோலா சகாரோபோலூ மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஒட்டகச்சிவிங்கி பற்றிய மரபியல் ஆய்வு

- கொல்கத்தாவில் உள்ள அலிப்பூர் விலங்கியல் பூங்காவில் உள்ள ஒட்டகச்சிவிங்கிகள் பெரும்பாலும் நுபியன் ஒட்டகச்சிவிங்கிகள் அல்லது ரோத்ஸ்சைல்ட் ரக ஒட்டகச் சிவிங்கிகளாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- இந்தியாவின் வடக்கத்திய ஒட்டகச்சிவிங்கி இனங்களின் (29 ஒட்டகச் சிவிங்கிகள்) மிகப் பெரியக் கூட்டமானது கொல்கத்தாவில் உள்ள அலிப்பூர் விலங்கியல் பூங்காவில் உள்ளது.

- சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு, பிரிட்டிஷ் காலனித்துவ வாதிகள் ஆப்பிரிக்காவில் உள்ள மற்ற காலனித்துவப் பகுதிகளிலிருந்து வடக்கத்திய ஒட்டகச் சிவிங்கிகளைக் கொண்டு வந்தனர்.
- நுபியன் ஒட்டகச்சிவிங்கியானது, ஒட்டகச்சிவிங்கிகளின் ஒரு கிளையினமாகும்.
- இது வடகிழக்கு ஆப்பிரிக்காவில் எல்லா இடங்களிலும் பரவலாகக் காணப்பட்டது.
- இருப்பினும், நுபியன் ஒட்டகச்சிவிங்கிகளின் 95% எண்ணிக்கையானது கடந்த 30 ஆண்டுகளில் குறைந்துள்ளது.
- ரோத்ஸ்சைல்ட்ஸ் ஒட்டகச் சிவிங்கியானது, 6 மீ உயரம் வரை வளரக்கூடிய மிக உயரமான கிளை உயிரினங்களில் ஒன்றாகும்.
- மற்ற ஒட்டகச்சிவிங்கிகளுடன் ஒப்பிடும்போது அதன் நிறம் தனித்துவமானது, ஏனெனில் அவற்றின் உடல் அடையாளக் குறியீடுகள் அவற்றின் கால்களில் பாதி வரை மட்டுமே காணப்படும்.
- நுபியன் மற்றும் ரோத்ஸ்சைல்ட் ஒட்டகச்சிவிங்கிகள் IUCN அமைப்பினால் 'மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளவை' மற்றும் 'ஆபத்தான நிலையில் உள்ள உயிரினம்' என பட்டியலிடப் பட்டுள்ளன.




# முக்கிய தினங்கள்

## உலகப் புள்ளியியல் தினம் - அக்டோபர் 20


- உலகப் புள்ளியியல் தினமானது 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் புள்ளியியல் ஆணையத்தால் நிறுவப்பட்டது.
- புள்ளி விவரங்களின் முக்கியத்துவம் மற்றும் குடிமைச் சமூகம் மற்றும் வணிகத்தின் மேம்பாட்டில் கல்வி சார்ந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை முன்னிலைப் படுத்தச்

செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டின் புள்ளியியல் தினத்தின் கருத்துரு, "நிலையான மேம்பாட்டிற்கான தரவு" என்பதாகும்.




## உலக எலும்புப் புரை நோய் தினம் - அக்டோபர் 20




- எலும்புப் புரை நோய் மற்றும் வளர்சிதை மாற்றம் சார்ந்த எலும்பு நோய்க்கான தடுப்பு, கண்டறிதல் மற்றும் சிகிச்சை பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- எலும்புப் புரை நோயினால் ஏற்படும் எலும்பு முறிவுகள் ஆண்கள் மற்றும் பெண்கள் என ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10 மில்லியன் இந்தியர்களைப் பாதிக்கின்றன.
- எலும்பு ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக ஐக்கியப் பேரரசின் தேசிய எலும்புப் புரை நோய் சமூக அமைப்பானது 1996 ஆம் ஆண்டு

அக்டோபர் 20 ஆம் தேதியன்று இந்தத் தினத்தினை அறிமுகப்படுத்தியது.

- எலும்புப் புரை நோயானது மனித உடலில் உள்ள எலும்புகளைப் பலவீனமாகவும், மிக எளிதாக உடையக் கூடியதாகவும் ஆக்குகிறது.
- இதனால் அவை திடீர் அசைவு, சிறிய வீழ்ச்சி, தும்மல் அல்லது கட்டி போன்ற காரணிகளினால் கூட எளிதில் உடைந்து போகும் தன்மையுள்ளதாக மாறும்.
- 2022 ஆம் ஆண்டின் உலக எலும்புப் புரை நோய் தினத்தின் கருத்துரு, 'எலும்பு ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்' என்பது ஆகும்.

## சர்வதேச சமையல் கலைஞர்கள் தினம் - அக்டோபர் 20

- சர்வதேச சமையல் கலைஞர்கள் தினம் 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது புகழ்பெற்ற சமையல் கலைஞரும் தொழிலதிபருமான மறைந்த டாக்டர் பில்லி கல்லாகரால் உருவாக்கப்பட்டது.
- இவர் தென்னாப்பிரிக்க சமையல் கலைஞர்கள் சங்கத்தின் தலைவராக 21 ஆண்டுகள் பணியாற்றினார்.
- இவர் 1996 ஆம் ஆண்டில் உலக சமையல் கலைஞர்கள் சங்கங்களின் (WACS) தலைவராகவும் பொறுப்பேற்றார்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு 'ஒரு ஆரோக்கியமான எதிர்காலத்தினை நோக்கி முன்னேறுவது' என்பது ஆகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★